# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை- மே 2019

**தரம் 13 (2019)** **வணிகக்கல்வி- 32-T-1** **இரண்டு மணித்தியாலம்**

**அறிவுறுத்தல்கள்**
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஓவ்வொரு வினாவிற்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**வினாத்தாள் 1**

| வினா இல | புள்ளிகள் |
|---|---|
| 01-30 | ……… |
| 30-50 | ……… |
| மொத்தம் | ……… |

01. பின்வரும் கூற்றுக்களில் வணிக நடவடிக்கையொன்றாகக் கருதப்படக் கூடிய மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
    1) கார்த்திக் தனக்குச் சொந்தமான வீடொன்றினை தனது நண்பரான சரவணனுக்கு விற்பனை செய்தல்
    2) குடும்பத் தலைவியான ரமணி தனது வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்கின்ற மரக்கறிகளை தினந்தோறும் உணவிற்காக பயன்படுத்தல்
    3) ஆறுமுகம் தனது மகளுக்கு வீடொன்றை நன்கொடை உறுதிப்பத்திரம் மூலம் ஒப்படைத்தார்.
    4) விசாலினி கழிவாக ஒதுக்கப்படுகின்ற துணித்துண்டுகளை பயன்படுத்தி தலையணைகளை தைத்து விற்பனை செய்கின்றார்.
    5) கமலினி தனது மகளின் பிறந்த நாளுக்கு அலங்காரக் கேக் ஒன்றினைத் தயாரித்தார். (………….)

02. சுரங்கமறுத்தலும், கனிய அகழ்வும், உற்பத்திக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில், மின்சாரம், வாயு, வெப்பம், மற்றும் குளிரூட்டல் வழங்கல் என்பன உள்ளடங்கும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்,
    1) விவசாய உற்பத்தி
    2) கைத்தொழில் உற்பத்தி
    3) முதனிலை உற்பத்தி
    4) இரண்டாம் நிலை உற்பத்தி
    5) மூன்றாம் நிலை உற்பத்தி (…………)

03. பேரினச் சூழல் காரணிகள் சில X நிரலிலும், அவற்றுடன் தொடர்புடைய உதாரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. பூகோளச் சூழல் | A. வணிக வங்கிகளால் கடனுக்கு வழங்கப்படும் வட்டிவீதம் குறைக்கப்படல் |
| 2. அரசியல் சூழல் | B. இணைய வலையமைப்பினூடான வணிகம் விருத்தியடைதல் |
| 3. மக்கட் சூழல் | C. சனத்தொகையில் ஆண், பெண் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படல் |
| 4. தொழில்நுட்பச் சூழல் | D. கூடிய விளைச்சலைப் பெற பழைய நுட்ப முறைகளை பரீட்சித்தல் |
| 5. பொருளாதாரச் சூழல் | E. இலங்கை அரசாங்கத்தினால் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள் உருவாக்கப்படல் |

X நிரலில் தரப்பட்டுள்ள பேரினச் சூழல் காரணிகளின் வரிசைப்படி Y நிரலிலுள்ள உதாரணங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) A, C, D, E, B 2) D, C, A, B, E 3) B, C, A, E, B 4) D, C, B, E, A 5) B, E, C, D, A (…………)

04. வணிகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அதிலிருந்து வாடிக்கையாளருக்கு மட்டும் உரிய சமூகப்பொறுப்புக்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
    1) சமத்துவமான நிலை, தொழில் பாதுகாப்பு
    2) சேதத்தை இழிவுபடுத்தல், நியாயமாக நடந்து கொள்ளல்
    3) வேலைவாய்ப்பிற்கு பங்களிப்பு, கழிவுப்பொருள் முகாமைத்துவம்
    4) சமத்துவமான நிலை, நியாயமான உழைப்பு பெறல்
    5) பொருளாதார நலன்களைப் பெறல், நியாயமான உழைப்பைப் பெறல் (…………)

05. இலங்கை அரசின் வரி வருமானத்துக்குள் உள்ளடங்கும் சில வரிகள் சில கீழே தரப்படுகின்றன.

A. வருமானவரி
B. சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி
C. சுங்க வரி
D. கம்பனி வரி
E. உற்பத்தி வரி
F. மூலதன இலாபத்தின் மீதான வரி
G. நிறுத்தி வைத்தல் வரி

மேலே தரப்பட்டவற்றுள் நேரில் வரியினை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A, C , F 2) B, C, F 3) A, D, E, G 4) A, B, E, G 5) B, C, E (…………)

06. பல்வேறு வணிக அமைப்புகளுக்கு உதாரணங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. கிருஸ்ணா ரேடர்ஸ்
B. வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பக முறை (தனிக்) கம்பனி
C. சிவா அன்ட் பிறதர்ஸ்
D. செலிங்கோ வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி
E. கூட்டுறவு நகர் (Co op city)
F. கொகா கோலா கம்பனி

இலாபம் பெறும் நோக்கமாகக் காணப்பட்டாலும் தனியார் துறைக்குட்பட்டதாகவும், சட்டரீதியான தனிமனித அந்தஸ்து அற்றதுமான வணிக அமைப்பாகக் காணப்படுவது,

1) A, B 2) B, D, F 3) A, C 4) D, F, G 5) B, C (…………)

07. வரையறுக்கப்பட்ட கம்பனிகளை பதிவு செய்கின்றபோது கம்பனிப்பதிவாளருக்குச் சமர்ப்பிக்கத் **தேவையில்லாதது** எது?

1) கம்பனி அகவிதிச் சட்டவிதிக்கோவை
2) கம்பனியின் இட அமைவைக் காட்டும் வரைபடம்
3) ஆரம்ப இயக்குனராகக் கடமையாற்ற சம்மதம் தெரிவிக்கும் கூற்று
4) ஆரம்ப செயலாளராகக் கடமையாற்ற சம்மதம் தெரிவிக்கும் கூற்று
5) பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் (…………)

08. பின்வரும் கூற்றுக்களிலிருந்து முயற்சியாண்மை என்னும் எண்ணக்கரு தொடர்பாக பொருந்தக் கூடிய மிகக் கிட்டியதான விடையினைத் தெரிவு செய்க.

1) டேவிட் மீன் பிடிப்பதற்காக மரபுரீதியான நுட்பமுறைகளை நவீனமயப்படுத்துகின்றார்.
2) சலீம் மரபு ரீதியான ஔடதங்களுக்கு பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஔடதங்களை உருவாக்குகின்றார்.
3) மாதவி விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறுவதற்காக தினமும் உடற்பயிற்சி செய்வதில் ஈடுபடுகின்றார்
4) ஆதவன் நகர்ப்புற வைத்தியசாலையொன்றில் நீரிழிவு நோயாளிகளை இலக்காகக் கொண்டு புதிய ஔடத இலைக்கஞ்சி வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்.
5) ரமணன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மேம்படுத்தல் முறையொன்றாக இலவசமாக புத்தகங்களை விநியோகிக்கின்றார். (…………)

09. சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகர்களுக்காக நடாத்தப்பட்ட செயலமர்வில் அவ்வணிகங்களுக்கான ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் மூன்றும், அந்நிறுவனங்களால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் மூன்றும் தொடர்பில் விரிவுரையாளரொருவர் சில விடயங்களை வெளிப்படுத்தினார்.

| நிறுவனம் | வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| 1. தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) | A. வெளிநாட்டு சந்தை வசதி வழங்கல் |
| 2. இலங்கை சிறிய மற்றும் நடுத்தரளவு கைத்தொழில் சபை (SLCSMI) | B. பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல் |
| 3. சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மை சபை | C. சிறந்த சாதனையாளருக்கு விருது வழங்கல் |

சிறிய நடுத்தரளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களையும், அவற்றினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களையும் சரியான ஒழுங்குமுறையில் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) C, B, A 2) B, C, A 3) A, C, B 4) A, B, C 5) C, A, B (…………)

10. பின்வருவன பணத்தின் சில பண்புகளும், தொழிற்பாடுகளும் ஆகும்.
   1. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படல்
   2. போலிகளை உருவாக்குவது கடினமாகவிருத்தல்
   3. பரிமாற்றூடகமாகச் செயற்படல்
   4. இலகுவாக கொண்டு செல்லக் கூடியதாகவிருத்தல்
   5. பெறுமானத் திரட்டாகக் கருமமாற்றுதல்
   6. சிறிய அலகுகளாகப் பிரிக்கக் கூடியதாகவிருத்தல்
   7. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமாகச் செயற்படல்

   மேலே தரப்பட்டவற்றுள் **பணத்தின் பண்புகள்** எத்தனை?

   1) 5   2) 3   3) 4   4) 2   5) 6   (…………)

11. காசோலை தொடர்பான சில கூற்றுக்கள் தரப்படுகின்றன. இவற்றுள் **பிழையான** கூற்றினைத் தெரிவு செய்க.
   1) காசோலையில் அச்சிடப்பட்டுள்ள " அல்லது கொண்டு வருபவருக்கு" என்ற சொல் வெட்டப்படாது விடப்பட்டுள்ள காசோலை காவியின் காசோலை ஆகும்.
   2) கட்டளைக் காசோலையினை இன்னொருவருக்கு சாட்டுதல் செய்யும்போது புறக்குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.
   3) காசோலையில் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே பெறுபவர் தனது பெயரை காசோலையின் பின்பக்கத்தில் எழுதுதல் புறக்குறிப்பிடல் எனப்படும்.
   4) காசோலை சட்டரீதியாகச் சாட்டப்பட்டது என்பது குறுக்குகோடிடல் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது.
   5) கோடிடப்படாத காசோலையினை வங்கிக் கருமபீடத்தில் வழங்கி பணமாக மாற்ற முடியும்.

   (…………)

12. தீபனின் லொறியானது விபத்தொன்றில் முற்றாகச் சேதமடைந்தது. இதற்கான நட்டஈட்டினை காப்புறுதி நிறுவனம் செலுத்த முன்னர் லொறியின் எஞ்சிய பகுதியினை காப்புறுதி நிறுவனம் தனக்கு உரிமையாக்கிக் கொண்டது. இதனுடன் தொடர்புடைய காப்புறுதித் தத்துவமாக அமைவது,
   1) பதிலாள் வைப்புத் தத்துவம்
   2) காப்புறுதி செய்யும் உரிமைத் தத்துவம்
   3) பங்களிப்புத் தத்துவம்
   4) அண்மிய காரணிகள் தத்துவம்
   5) உச்ச நம்பிக்கைத் தத்துவம்   (…………)

13. எழுத்து மூலமான தொடர்பாடல் முறையின் அனுகூலமாகக் கருதப்படக் கூடியது,
   1) தகவல்களின் சரியான தன்மை உயர்மட்டத்தில் காணப்படல்
   2) தகவல்களை வழங்குபவரும், பெறுபவரும் நேரடியாகத் தொடர்புபடல்
   3) தரவுகள், குறிப்புக்கள், அட்டவணைகள் என்பவற்றை இலகுவாக தொடர்பாடல் செய்யமுடிதல்
   4) தகவல்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் முன்வைக்க முடிதல்
   5) தகவல்களை மிக விரைவாகவும், இரகசியமாகவும் முன்வைக்கமுடிதல்   (…………)

14. முதல்வர் சார்பாக பொருட்களை கொள்வனவு, விற்பனை செய்யும்போது தனது சொந்தப் பெயரில் கொடுக்கல் வாங்கல் செய்யும் முகவர்,
   1) தரகு முகவர்   3) பொறுப்புமுகவர்   5) தரகர்
   2) ஏல முகவர்   4) காரணிகர்   (…………)

15. X நிரலானது சர்வதேச வியாபாரத்தில் பயன்டுத்தப்படும் ஆவணங்கள் சிலவற்றையும், Y நிரலானது அவற்றின் முக்கியத்துவத்தையும் காட்டுகின்றது.

| **ஆவணங்கள்** | **முக்கியத்துவம்** |
|---|---|
| 1. நட்டஈட்டுக் கடிதம் | A. ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதியை ஏற்றுமதியாளருக்கு கிடைப்பதை உறுதிசெய்தல் |
| 2. சுகநலச் சான்றுப்பத்திரம் | B. முன்னுரிமைத் தீர்வைச் சலுகைகளை பெற்றுக்கொள்ள துணைபுரிதல் |
| 3. தோற்றுவாய்ச் சான்றிதழ் | C. குற்றமுடைய சுமைச்சீட்டிற்குப் பதிலாக தூய சுமைச்சீட்டினைப் பெற உதவுதல் |
| 4. நாணயக்கடிதம் | D. சில வகையான விவசாய உற்பத்திப் பொருட்களின் நுகர்வுத் தன்மையினை உறுதிப்படுத்தல் |

   X நிரலில் தரப்பட்டுள்ள ஆவணங்களுக்கு பொருத்தமான Y நிரலில் காட்டப்பட்டுள்ள முக்கியத்துவத்தை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

   1) C, D, B, A   3) C, D, A, B   5) A, B, D, C
   3) D, C, B, A   4) A, C, B, D   (…………)

16. பின்வரும் கூற்றுக்களில் சரியானவற்றைத் தெரிவு செய்க.
   A. செய்யவேண்டியவற்றை சரியாகச் செய்தல் விளைதிறன் ஆகும். (Doing the right thing )
   B. சரியானவற்றைச் செய்தல் வினைத்திறன் ஆகும். (Doing the thing right )
   C. உள்ளீட்டுக்கும், வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பு உற்பத்தித்திறன் ஆகும்.
   1) A சரியானது, B, C உண்மையானதல்ல
   2) C சரியானது, A, B உண்மையானதல்ல
   3) Aயும், B யும் சரியானது, C உண்மையானதன்று
   4) A, B, C ஆகிய மூன்று கூற்றுக்களும் சரியானவை
   5) A, B, C ஆகிய மூன்று கூற்றுக்களும் பிழையானவை (…………)

17. முகாமைத்துவக் கருமங்களுடன் தொடர்புடைய சில பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
   1. சூழல் ஆய்வு
   2. திணைக்களப்படுத்தல்
   3. நோக்கங்களை உருவாக்குதல்
   4. ஊக்கப்படுத்தல்
   5. நியமங்களை உருவாக்குதல்
   6. பணிகளை இனங்காணல்
   7. தொழிற்பிரிப்பு

   மேலே தரப்பட்டவற்றுள் ஒழுங்கமைத்தல் பணிகள் எத்தனை காணப்படுகின்றது.
   1) 3   2) 4   3) 5   4) 2   5) 1 (…………)

18. X நிரலானது தலைமைத்துவப் பாங்குகளையும்,Y நிரலானது அத்தலைமைத்துவப் பாங்கிற்கேற்ப A, B, C, D, E என்னும் தலைவர்கள் செயற்படும் முறையும் தரப்படுகின்றது.

| X | Y |
|---|---|
| 1. சர்வதிகாரத் தலைமைத்துவம் | A. கருமங்களைச் செயற்படுத்தும்போது தனக்கு கீழ் வேலை செய்பவர்களுக்கு கூடிய சுதந்திரம் வழங்குகின்றார். |
| 2. சனநாயகத் தலைமைத்துவம் | B. உற்பத்தியினை அதிகரித்து ஊழியர்களுக்கு ஒப்படைக்கின்ற கருமங்களை நிறைவேற்றுவதில் கூடுதல் அக்கறை காட்டுகின்றார். |
| 3. தன்னிச்சையான தலைமைத்துவம் | C. தனக்கு கீழுள்ளவர்களை கவனத்தில் கொள்ளாது தனது சுயதீர்மானத்திற்கு ஏற்ப செயற்படல் |
| 4. வேலை சார்ந்த தலைமைத்துவம் | D. ஊழியர்களை ஊக்கப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றார். |
| 5. ஊழியர் சார்ந்த தலைமைத்துவம் | E. தனக்கு கீழுள்ளவர்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு செயற்படுகின்றார். |

   X நிரலில் தரப்பட்டுள்ள தலைமைத்துவப் பாங்கின் வரிசைக்கேற்ப Y நிரலிலுள்ள தலைவர்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
   1) C, E, A, D, B   2) C, E, A, B, D   3) A, D, B, C, E
   4) A, B, D, E, C   5) B, C, D, A, E (…………)

19. Ramco குடை உற்பத்தி நிறுவனம் ISO 9000 தரச்சான்றிதழை சர்வதேச தர நிறுவனத்திடமிருந்து பெற்றிருந்தது. Ramco நிறுவனம் பின்பற்றிய தரக்கட்டுப்பாட்டு நுட்ப முறையாகக் கருதப்படுவது,
   1) தரவட்டம் ( Quality circle)
   2) பூச்சிய வழு (Zero Defects)
   3) தரப்பாதுகாப்பு (Quality Assurance)
   4) தரநியமம் (Quality Stansards)
   5) புள்ளிவிபர ரீதியிலான செயல்முறைக்கட்டுப்பாடு (Statistical Process Control) (…………)

20. பல்வேறு நியதிகளினடிப்படையில் உற்பத்தி முறைகள் ஒன்றுக்கொன்று வேறுபடும் முறைகள் கீழே அட்டவணையில் தரப்படுகின்றது.

| நியதிகள் | **வேலை உற்பத்தி** | **தொகுதி உற்பத்தி** | **பாய்ச்சல் உற்பத்தி** |
|---|---|---|---|
| 1. வெளியீட்டின் அளவு | A | நடுத்தரளவு | மிகக் கூடியது |
| 2. B | பல்வேறுபட்டது | சில வகை மட்டும் | C |
| 3. உற்பத்திச் செயன்முறையின் நெகிழ்வுத்தன்மை | நெகிழ்வுடையது | D | நெகிழ்ச்சியானது |
| 4. உற்பத்திச் செய்தல் கட்டளைக்கா? இருப்பிற்கா? | E | கட்டளைக்கும், சிறிய அளவில் இருப்பிற்கானதும் | இருப்பிற்கானது |

மேலே தரப்பட்ட அட்டவணையில் A, B, C, D, E ஆகிய இடைவெளிக்கு பொருத்தமாக அமையும் விடயங்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

| விடை இல | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1) | மிக அதிகம் | உற்பத்தி வரிசை | பல வகை | பாரியளவு | கட்டளைக்கானது |
| 2) | மிகக் குறைவு | உற்பத்தி வரிசை | சில வகை | நடுத்தரளவு | பாரியளவு |
| 3) | மிகக் குறைவு | உற்பத்தி வரிசை | சராசரியானதாகும் | ஒன்று மட்டும் | விற்பனைக்கானது |
| 4) | மிகக் குறைவு | உற்பத்தி வரிசை | ஒன்று மட்டும் | சராசரியானதாகும் | கட்டளைக்கானது |
| 5) | மிக அதிகம் | உற்பத்தி வரிசை | ஒன்று மட்டும் | நடுத்தரளவு | இருப்புக்கானது |

(…………)

21. கப்பல் ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு பின்பற்ற வேண்டிய தொழிற்சாலை தள அமைப்புத் திட்ட (Layout) முறையாகக் கருதப்படுவது,
   1) செயன்முறைத் தள அமைப்பு (Process Layout)
   2) உற்பத்திப் பொருள் தள அமைப்பு (Product Layout)
   3) சிறுஅலகுகள் தள அமைப்பு (Cellular Layout)
   4) செயன்முறை மற்றும் உற்பத்திப்பொருள் இரண்டும் இணைந்தது
   5) நிலையான இடத்தள அமைப்பு (Fixed Layout) (…………)

22. அசையும் உருவங்கள், ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள், விலைக்குறைப்பு, செய்தித்தொடர்பு, தொலைபேசி மூலமான விற்பனை, விளையாட்டு விழாக்கள், நிறுவனச் சுற்றுலா போன்றவை உள்ளடங்கும் சந்தைப்படுத்தல் கலவை மாறியாக அமைவது,
   1) பொருள் கலவை (Product mix)
   2) இடக்கலவை (Place mix)
   3) விலைக்கலவை(Price Mix)
   4) மேம்படுத்தல் கலவை (Promotion Mix)
   5) மேற்கூறிய அனைத்தும் (…………)

23. XY கம்பனியின் விற்பனையானது மிகவும் கீழ் மட்டத்திற்கு சென்றதுடன், இலாப அளவும் குறைவடைந்து சென்றது. மேற்படி கம்பனி உற்பத்தியொன்றின் (பொருளொன்றின்) வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் எக்கட்டத்திலுள்ளது?
   1) பொருள் அபிவிருத்திக் கட்டம் (Product Development stage)
   2) அறிமுகக் கட்டம் (Introduction Stage
   3) முதிர்ச்சிக் கட்டம் (Maturity Stage)
   4) விருத்திக் கட்டம் ( Growth Stage)
   5) வீழ்ச்சிக் கட்டம் (Decline Stage) (…………)

24. நிதியீட்டல் வழிமுறைகளின் அனுகூலங்கள் சில கீழே தரப்படுகின்றன.
  A. கிரயம் குறைவு
  B. பாரிய நிதியினைத் திரட்ட முடிதல்
  C. பெற்றுக் கொள்வது இலகு
  D. விசேட நிபந்தனைக்குட்பட அவசியம் இல்லை
  E. வணிக உரிமையை விரிவாக்க முடிதல்
  F. வணிகப் பொறுப்புக்கள் அதிகரிக்காமை

  மேற்குறிப்பிட்டவற்றுள் உள்ளக ரீதியிலான நிதியீட்டல் வழிமுறைகளின் அனுகூலங்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதி எது?

  1) A, C, D, F   2) B, D, E, F   3) A, C, D, E   4) A, B, C, F   5) C, D, E, F   (…………)

25. வுணிகங்களால் நிதிக்கூற்றுக்களை பகுப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தப்படும் நிதிவிகிதங்களும், அவ்விகிதங்களால் பெறப்படும் தகவல்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| ❖ நிதி விகதங்கள் | ❖ பெறப்படும் தகவல்கள் |
|---|---|
| 1. மொத்த இலாப விகிதம் (Gross Profit Ratio)<br>2. உரிமை மீதான திரும்பல் விகிதம் (Return on EquityRatio)<br>3. தேறிய இலாப விகிதம் (Net Profit Ratio)<br>4. கடன் உரிமையாண்மை விகிதம் (Debt Equity Ratio) | A. செயற்பாட்டு நடவடிக்கைகளது வினைத்திறனை அளவிட முடியும்.<br>B. உரிமை மூலதனத்திற்கும், நிலையான வட்டிவீதத்தைப் பெறும் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பு<br>C. சாதாரண பங்குரிமையாளர்களினால் வழங்கப்பட்ட மூலதனத்திற்கு உழைக்கப்பட்ட இலாபத்தை அறிதல்<br>D. நிறுவனத்தின் விலைக்கொள்கையை அறிய முடிதல் |

  நிதி விகிதங்களுக்கேற்ப பெறப்படும் தகவல்களை சரியான முறையில் ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் விடையாக அமைவது,

  1) D, C, B, A   2) B, A, D, C   3) D, C, A, B   4) A, B, D, C   5) B. D, A, C
  (…………)

26. பின்வருவன மனிதவள முகாமைத்துவக் கருமங்கள் தொடர்பான சில கூற்றுக்கள் ஆகும்.
  A. தொழில்பகுப்பாய்வு மூலம் பெற்றுக்கொள்ளும் தகவல்களைக்கொண்டு தொழில் விவரணம், தொழில் குறித்துரைத்தல் தயாரிக்கப்படுகின்றது.
  B. நிறுவனமொன்றிற்கு தனிநபர்களை ஈர்த்துக்கொள்வதற்கு தேவையான தகவல்களை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் ஆவணம் தொழில்விவரணம் ஆகும்.
  C. ஊழியர்களை தெரிவு செய்த பின்னர் பொருத்தமான நபர்களை தொழிற்பதவிகளில் நியமனம் செய்யும் செயல்முறை இணைத்துக்கொள்ளல் எனப்படும்.
  D. முகாமைத்துவ ஊழியரின் நிகழ்கால நிலைமையினைவிட எதிர்காலச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளும் செயன்முறை பயிற்சி ஆகும்.
  E. மனிதவளக்கேள்வி மற்றும் நிரம்பலை ஒப்பீடு செய்தல் மனிதவளத்திட்டமிடல் செயன்முறையின் மூன்றாவது படிமுறையாகும்.

  மேற்கூறப்பட்டவற்றுள் சரியான கூற்றினை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

  1) A, C, E   2) A, C, D   3) B, D, E   4) B, C, D   5) A, B, C   (…………)

27. ரமணன், சந்திரா, சலீம் ஆகியோர் அரச நிர்வாக சேவையில் ஈடுபடும் அதிகாரிகள் மூவராவார்.

| பெயர் | சேவைக்காலம் தரம் 11 இல் | மொத்த சேவைக்காலம் வருடம் |
|---|---|---|
| ரமணன் | 06 | 20 |
| சந்திரா | 08 | 10 |
| சலீம் | 07 | 25 |

இம்மூவரில் ஒருவரை தரம் 1 க்கு பதவி உயர்த்தப்பட வேண்டியுள்ளது. மிகவும் பொருத்தமான நபருக்குரிய கூற்றாக அமைவது,

1) மொத்த சேவைக்காலம் ரமணனைவிட சலீமின் சேவைக்காலம் கூடுதலாக இருப்பதனால் சலீம் பொருத்தமானவர்.
2) தரம் 11 இல் சேவைக்காலம் அதிகமாக இருப்பதனால் சந்திரா தகைமை கொண்டவர்
3) சிரேஸ்ட்டத்துவமுடையவராக இருப்பதனால் ரமணன் பொருத்தமானவர்.
4) மொத்த சேவைக்காலம் 25 வருடங்களை பூர்த்தி செய்து, இளைப்பாறிச் செல்வதற்கு அண்மித்திருப்பதனால் சலீம் பொருத்தமானவர்.
5) 11 ஆம் தரத்தில் குறைவான சேவைக்காலம் உள்ளதால் ரமணன் தகைமை கொண்டவர்.(…………)

28. வரையறுத்த டேவிட் கம்பனியின் நிதிப்பிரிவொன்றுக்கு மொத்தக் காசுக் கொடுப்பனவுகள், சம்பளக்கொடுப்பனவுகள், கணக்கீட்டுப் பதிவுகளை மேற்கொள்ளல், கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல், அவற்றை கணக்காய்வு செய்தல் என்றவாறு பல பணிகள் இனங்காணப்பட்டன. இவற்றை நிறைவேற்றுவதற்காக வெவ்வேறான பதவிகள் ஏற்படுத்துவதைக் குறிப்பது,
1) தொழில் பகுப்பாய்வு 2) செயற்றிறன் மதிப்பீடு 3) வேலை/தொழில் விபரணம்
4) வேலை/ தொழில் குறித்துரைத்தல் 5) தொழில் உருவாக்கம் (…………)

29. அமைப்பொன்றின் அன்றாடச் செயற்பாட்டுக் கருமங்களின்போது உருவாகின்ற தரவுகளை ஒழுங்கமைக்க உதவும் தகவல் முறைமையாக அமைவது,
1) நிறைவேற்று உதவி முறைமை (Executive Support System- ESS)
2) தீர்மான உதவி முறைமை (Decision Support System DDD)
3) முகாமைத்துவ தகவல் முறைமை ( Management Information System- MIS)
4) கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (Transaction Processing System- TPS)
5) வணிக நுண்மதித் தகவல் முறைமை ( Business Intelligence System –BIS) (…………)

30. வணிகத்திட்டமொன்றைத் தயாரிக்கும்போது வெளியகப்பிரிவினர்களை இலக்காகக் கொண்டு, வணிகத்தின் அடிப்படை விடயங்களை பொழிப்பாக்கி சுட்டிக்காட்டும் பகுதியாக அமைவது,
1) வணிக விபரம் 2) நிறைவேற்றுச் சுருக்கம்
3) சந்தைப்படுத்தல் திட்டம் 4) செயற்பாட்டுத்திட்டம்
5) நிதித்திட்டம் (…………)

- **31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

31. (அ) …………………………………… காரணமாக மிகை உற்பத்தி ஏற்பட்டதுடன், மிகை உற்பத்தியை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் ………………………………… எனப்படுகின்றது.

(ஆ) ஆடைத்தொழிற்சாலையொன்றில் தொழிலாளர்களின் கோவைகளைத் தயாரித்தல், வருகை அட்டவணை பேணல் என்பன ………………………………….. கருமமாக காணப்படுவதுடன், ஊழியர்களை இணைத்துக்கொள்ளல், பயிற்றுவித்தல் என்பன ……………………………….. கருமமாக கருதப்படுகின்றது.

32. அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறைக்கான உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.
A. நிதிக்கொள்கை, இறைக்கொள்கை (பிசுக்கால்) என்பவற்றை நடைமுறைப்படுத்தல் ……………………………………
B. கட்டிட அமைப்புத் திட்டங்களுக்கு அனுமதியளித்தல் ……………………………………
C. வீதிப் பராமரிப்பு ……………………………………
D. அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் ……………………………………

A, B, C, D ஆகிய உதாரணங்களுக்கு பொருத்தமான செல்வாக்குச் செலுத்தும் முறையினை இடைவெளியில் குறிப்பிடுக.

33. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா என்பதை அவற்றிற்கு எதிரேயுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.
A. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அரச திணைக்கள வகையைச் சார்ந்த நட்டப்பொறுப்பு வரையறுக்கப்படாத வணிக அமைப்பாகும். (…………………)
B. மென்பொருள் அபிவிருத்தி நிறுவனமான மைக்ரோ சொப்ட் நிறுவனமானது நொக்கியா (Nokia) கம்பனியின் மென்பொருள் அலகினைக் கொள்வனவு செய்தமையை கிடை இணைப்பு மூலம் ஒன்றிணைதல் எனக் கூற முடியும். (…………………)
C. நடைமுறையில் காணப்படும் கருத்து அல்லது எண்ணக்கருவிற்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பவர் முயற்சியாளராவார். (…………………)
D. சுயாதீனமான உரிமையும், சுயாதீனமாகச் செயற்படுகின்றதும் குறிப்பிட்ட துறையில் அதிகாரமற்ற வணிகங்களை சிற்றளவு வணிகம் எனலாம். (…………………)

34. (அ) இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன ……………………………………………….. வங்கிகளாகக் காணப்படுவதுடன், தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பன ……………………………………. வங்கிகளாகக் கருதப்படுகின்றது.

(ஆ) மோசடிகள் இடம்பெறல், தேவையற்ற நுகர்வு முறைக்கு பழக்கப்படல் போன்ற பிரதிகூலங்களை கொண்ட இலத்திரனியல் பணமாக ………………………………………… காணப்படுவதுடன், வங்கியில் கணக்கொன்று இருக்கவேண்டிய தேவையுள்ள இலத்திரனியல் பணமாக ………………………………….. காணப்படுகின்றது.

35. வழங்குநரிடமிருந்து மூலப்பொருட்களை கொள்வனவு செய்வது தொடக்கம் உற்பத்தி செய்து உற்பத்திப் பொருட்களை இறுதி நுகர்வோனுக்கு கிடைக்கச் செய்தல் வரையிலான அமையவியல் (Logistics)சேவை முறைமையின் அசைவினைக் காட்டும் பின்வரும் பாய்ச்சல் கோட்டுப் படத்திலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.

………A……. ⟹ உற்பத்தியாளர் ⟹ ……B……. ⟹ ……C…….. ⟹ ……D……

A. ……………………………..  C. ………………………………
B. ……………………………..  D. ………………………………

36. (அ) முகாமையாளரொருவருக்கு சிக்கலான சந்தர்ப்பமொன்றில் உருவாகின்ற புதிய கருத்துக்களை பகுப்பாய்வு செய்யும் உளரீதியான ஆற்றல் …………………………………… எனப்படும்.
(ஆ) பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை கணிப்பிடும்போது கட்டளையொன்றிற்கான கிரயத்துடன், (1)…………………………………………….. (2) ………………………………………………………. என்பன கணிப்பீட்டுக்குட்படுத்தப்படும்.

37. (அ) சந்தைப்படுத்தல் கலவையில் சகல மாறிகளும் இலக்கு வாடிக்கையாளரை திருப்திப்படுத்தும் நோக்கில் காணப்படவேண்டுமென……………………………… சந்தைப்படுத்தல் எண்ணக்கரு விளக்குகின்றது.
(ஆ) கொழும்பு பங்கு பரிமாற்றகம் ஒரு ……………………………………….. கம்பனியாகக் காணப்படுவதுடன், இதன் கருமங்களை முறைமைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் என்பன ……………………………………………………… மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

38. (அ) தொழில் ஒப்பந்தமொன்று ஏற்பட்டுள்ளது என்பதற்கான எழுத்துமூலமான சாட்சியொன்றாக ……………………………………… காணப்படுகின்றது.
(ஆ) பதவியில் இணைக்கப்பட்ட புதிய ஊழியரொருவரை பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் சேவை செய்ய வேண்டிய காலப்பகுதி …………………………………… எனப்படும்.

39. (அ) கணினி வலையமைபின் இரு பிரதான வகைகளாக (1) ……………………………………………… (2) ………………………………………………………………….. காணப்படுகின்றது.
(ஆ) இலத்திரனியல் செய்தியொன்றை அனுப்புவதற்கு அனுப்புவருக்கும், பெற்றுக்கொள்பவருக்கும் (1)……………………………………………….. (2) ……………………………………………… இருத்தல்வேண்டும்.

40. (அ) வணிக எண்ணங்கள் அனைத்திற்கும் பொருத்தமான வணிக எண்ணத்தை இனங்காண்பதற்காக சகல எண்ணங்களையும் மதிப்பீட்டுக்குட்படுத்தல் …………………………………………. எனப்படும்.
(ஆ) வணிகத்திட்டமானது (1) வணிகமொன்றை விரிவுபடுத்தல், (2)……………………………………… (3) ……..…………………………………. ஆகிய சந்தர்ப்பங்களின்போது தயாரிக்கப்படுகின்றது.

➢ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முன்னால் ஜனாதிபதியொருவரான ஜோன் எவ் கெனடியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட நான்கு உரிமைகளையும் குறிப்பிடுக.
1) ………………………………………………………………………………………
2) ………………………………………………………………………………………..
3) ………………………………………………………………………………………
4) ………………………………………………………………………………………

42. முயற்சியாண்மையின் போக்குகள் நான்கு தருக.
1) ………………………………………….. 2) …………………………………………...
3) ………………………………………… 4) …………………………………………..

43. சிறிய நடுத்தரளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் அரச நிறுவனங்கள் நான்கின் பெயர்கனைத் தருக.
1) ……………………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………………
3) ……………………………………………………………………………………………………
4) ……………………………………………………………………………………………………

44. பொறுப்புக் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளக் கூடிய பொறுப்புக் காப்புறுதி ஒப்பந்த வகைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
1) ………………………………………………… 2) ………………………………………........
3) …………………………………………………

45. SAARC அமைப்பின் ஒத்துழைப்பிற்கான செயற்பாடுகள் இடம்பெறும் நான்கு துறைகளைக் குறிப்பிடுக.
1) …………………………………………………. 2) ……………………………………………….
2) …………………………………………………. 3) ……………………………………………..

46. ஹென்றி மிட்ஸ் பேர்கின் ( Hentry Mintzberg) தீர்மானமெடுத்தல் வகிபாகத்தின் உபவகிபாகங்களை குறிப்பிடுக.
1) …………………………………………….. 2) ……………………………………………
3) ……………………………………………. 4) ……………………………………………

47. உற்பத்தித் துறையினை மேம்படுத்தக்கூடிய புதிய உற்பத்தித் தொழில்நுட்ப முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.
1) ……………………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………………..
3) ……………………………………………………………………………………………………..
4) ……………………………………………………………………………………………………

48. பொருத்தமான விநியோக வழிமுறையொன்றைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைத் தருக.
1) ……………………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………………
3) …………………………………………………………………………………………………..
4) ……………………………………………………………………………………………………

49. நிதி உட்கட்டமைப்பு வசதிகள் நான்கினைக் குறிப்பிடுக.
1) ……………………………………………………………………………………………………
2) ……………………………………………………………………………………………………
3) ……………………………………………………………………………………………………
4) ……………………………………………………………………………………………………

50. ஊழியர் அசைவினை ஏற்படுத்தக் கூடிய முறைகள் நான்கு தருக.
1) ……………………………………………….. 2) ……………………………………………..
3) ……………………………………………….. 4) ……………………………………………

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை- மே 2019

**தரம் 13 (2019)** **வணிகக்கல்வி- 32-T-11** **மூன்று மணித்தியாலம்**

**அறிவுறுத்தல்கள்**
- ❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

## பகுதி 1

**வினா இல 01**

01. தற்போது தனியார் கம்பனியொன்றில் வேலை செய்யும் சுரேஸ் என்பவர், வித்தியானந்தா கல்லூரியில் வணிகப் பிரிவில் கல்வி கற்று 2018 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீசையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றிருந்ததுடன், அவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து கடிதத்தையும் பெற்றுள்ளார்.
    (அ) மேற்படி சம்பவத்தின்படி, வித்தியானந்தாக் கல்லூரியினால் நிறைவு செய்யப்படும் மனித தேவை ஒன்றினையும், விருப்பம் ஒன்றினையும் குறிப்பிடுக.
    (ஆ) மேலே சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினை வித்தியாசமான நான்கு வணிக வகைப்படுத்தல் அடிப்படைகளின் கீழ் வகைப்படுத்திக் காட்டுக.
    (04 புள்ளிகள்)

02. விமலன் பிரபல பாடசாலைக்கு அண்மையில் காகிதாதி மற்றும் புத்தகங்கள் விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். இவரின் வணிகத்தில் வெளியக ரீதியாக அக்கறை செலுத்தும் நால்வரைக் குறிப்பிட்டு அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் இரண்டு வீதம் தருக.
    (04 புள்ளிகள்)

03. ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றிற்கு உரிமையாளரான காருண்யன் என்பவர் தனது வணிகம் தொடர்பான வணிக ஒழுக்கக் கோவை ஒன்றை கட்டியெழுப்பத் தீர்மானித்தார். இதன்போது கவனிக்க வேண்டிய நான்கு விடயங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. (04புள்ளிகள்)

04. " வணிகம் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் தேவைப்பாடு தொடர்பாக கூடிய அவதானமொன்று நிகழ்காலத்தில் விருத்தியடைந்து வருகின்றது"
    (அ) சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் வணிகம் ஒன்றிற்கு கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.
    (ஆ) சூழலின் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு வணிகங்கள் செயற்படும் பொழுது விசேடமாக கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

05. (அ) அரசு வணிக நடவடிக்கைகளில் தலையிடாதிருப்பதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகள் நான்கு தருக.
    (ஆ) அரசுக்கும் வணிகங்களுக்குமிடையே சாதகமான நெருங்கிய தொடர்பொன்றினை ஏற்படுத்துவதற்கு அரசு வணிகங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதுடன், வணிகங்களும் அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதில் பங்களிப்பினை வழங்குதல் வேண்டும். அந்த வகையில் அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.
    (04 புள்ளிகள்)
    (மொத்தம் 20 புள்ளிகள்)

**வினா இல 02**

01. (அ) மத்தியவங்கி வட்டிவீதத்தை குறைக்கும் போது வணிகத்தில் ஏற்படும் சாதகமான விளைவுகளை விளக்குக.
(ஆ) அண்மைக் காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பானது கடந்தகாலங்களைவிட தற்போது தேவையானதொன்றாக இருப்பதற்கான காரணங்கள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)

02. ராதா நவீன முறையிலான ஆடை வடிவமைப்பினை மேற்கொள்வதில் சிறப்பாற்றல் உள்ளவர். கீதா எந்த ஒரு வடிவமைப்பெனினும் அதனை வெட்டி தைப்பதில் சிறப்புத்தேர்ச்சியுடையவர். இருவரும் இணைந்து ஆடை உற்பத்தி தொடர்பான பங்குடைமை வணிகம் ஒன்றை ஆரம்பிக்கின்றனர்.
(அ) ராதா, கீதா இருவரும் ' பங்குடைமை வணிகம்' ஆரம்பிப்பது பொருத்தமானது என நீர் கருதுகின்றீரா? உமது விடைக்கான காரணம் தருக. (01 புள்ளி)
(ஆ) மேற்குறிப்பட்ட பங்குடைமை வணிக அமைப்பில் நீர் இனங்காணக்கூடிய இரண்டு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
(இ) ராதா, கீதா இருவரும் நன்றாக பங்குடைமையை நடாத்திச் செல்ல பங்குடைமை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க விரும்புகின்றனர். அவ்வாறான பங்குடைமை ஒப்பந்தம் ஒன்றில் பொதுவாக எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதைக் குறிப்பிடுக. (02 புள்ளி)

03. (அ) காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்று பொதுக்கம்பனியாக மாறுவதற்கு தீர்மானித்துள்ளது. பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டால் தற்போதுள்ள தனிப்பட்ட கம்பனி பங்குதாரருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
(ஆ) அரசதுறை வணிக அமைப்பினுள் உள்ளுராட்சி நிறுவனங்களும் ஒன்றாகும். அவ்வாறான வணிக அமைப்பின் பண்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

04. பளை பிரதேசத்தில் வசிக்கும் ராகுலன் என்பவர் முகாமைத்துவப் பட்டதாரியாவார். இவரின் தந்தை அப்பிரதேசத்தல் காணப்படும் பாரியளவிலான தென்னம் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து தேங்காய் மட்டைகளைப் பயன்படுத்தி தும்புத் தொழிற்சாலையொன்றை நடாத்தி வந்தார். தந்தையின் தொழிற்சாலைக் கருமங்களுக்கு ராகுலன் ஓய்வு நேரத்தில் உதவி செய்து வந்தார். சூழல் மீது அக்கறை கொண்ட இவர் தும்பு மற்றும் தென்னைசார் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான தகவல்களை புத்தகங்களை வாசிப்பதன் மூலமும், இணையத்தில் தேடுவதன் மூலமும் பெற்றுக்கொண்டார். தந்தையின் வாடிக்கையாளருடன் சிறந்த உறவையும் பேணி வந்திருந்தார்.

தந்தையின் மறைவுக்கு பின்னர் முழுமையாக தொழிற்சாலைக் கருமங்களை பொறுப்பேற்று நவீன முறையிலான சுவையூட்டிய தேங்காய்பால் உற்பத்தி, அலங்காரப்பொருட்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள் என்பவற்றை புதிய முறையில் வடிவமைத்து சந்தைக்கு அறிமுகம் செய்தார். இவரின் சூழல்நேயம் கொண்ட உற்பத்திப்பொருட்கள்மக்கள் மத்தியில் அதிக விருப்பம் கொண்டதாக காணப்பட்டதுடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சி ஒன்றின் மூலம் வெளிநாட்டுக் கொள்வனவாளரிடமிருந்தும் கட்டளைகள் கிடைக்கத் தொடங்கின.
(அ) மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி ராகுலனை முயற்சியாளராக கருத முடியுமா? உமது விடைக்கான காரணம் தருக.
(ஆ) மேலே குறிப்பிட்ட தகவலின்படி ராகுலனுக்கு வெளிப்படும் முயற்சியாண்மைப் பண்புகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)

05. நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் வழிமுறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**வினா இல 03**

01. (அ) கேள்வி வைப்பு ( நடைமுறைக் கணக்கு), நிலையான வைப்பு இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
(ஆ) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
i. சட்டப்பணம் ( Currency)
ii. அண்மிய பணம் ( Near Money) (04 புள்ளிகள்)

02. (அ) ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.
(ஆ) மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

03. (அ) வணிக வங்கிகள் வாடிக்கையாளர் சேவைகளின் போது, வாடிக்கையாளர்கள் சார்பாக பிரதிநிதியொருவர் எனும் வகையில் செயற்படுகின்றது. அவ்வாறான பிரதிகர்த்தா சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.
(ஆ) காசோலையில் குறுக்குகோடிடலின் முக்கியத்துவம் இரண்டு தருக.
(04 புள்ளிகள்)

04. (அ) ஆயுள் காப்புறுதி ஏனைய காப்புறுதி வகைகளிலிருந்து வேறுபடும் முறையினைக் குறிப்பிடுக.
(ஆ) மோட்டார்வாகனக் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளக் கூடிய காப்புறுதி வகைகள் இரண்டு தருக.
(04 புள்ளிகள்)

05. (அ) நிறுவனமொன்றின் அகத்தொடர்பாடலுக்கும், புறத்தொடர்பாடலுக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகள் தருக.
(ஆ) தொடர்பாடலில் காணப்படும் தடைகளை அகற்றுவதற்கு பயன்படுத்தும் உபாயமுறைகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**வினா இல 04**

01. (அ) தற்காலத்தில் இலங்கையில் போக்குவரத்துத் துறையில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய முன்னேற்றம் அதிவேக பாதை உருவாக்கத்தின் மூலம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பெருந்தெரு அபிவிருத்தி மூலம் மட்டும் ஒரு நாட்டின் போக்குவரத்துத் துறையின் செயற்றிறனை உயர்த்திவிட முடியுமா? உமது விடையை நியாயப்படுத்துக.

(ஆ) போக்குவரத்து வணிகருக்கு முக்கியத்துவம் பெறும் முறைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

02. (அ) களஞ்சியசாலையொன்றை நிறுவும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
(ஆ) களஞ்சியசாலையொன்றில் ஒழுங்குமுறையாக பொருட்களை கையாள்வதற்கும், பொருட்களை இடம் மாற்றுவதற்கும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதனால் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

03. (அ) வியாபாரத்திற்காக இடைநடுவர்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெறப்படும் அனுகூலங்கள் நான்கு தருக.
(ஆ) சில்லறை வியாபாரியொருவரினால் நுகர்வோருக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
(04 புள்ளிகள்)

04. வியாபார ஒப்பந்தங்கள் மற்றும் வியாபார வலயங்களை உருவாக்கிக் கொள்வது நவீன சர்வதேச வர்த்தகத்தின் புதிய போக்காகும்.
(அ) வியாபார வலயம் (Trade Bloc) என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) சர்வதேச வர்த்தகத்தில் தற்போது காணப்படும் இரண்டு வியாபார வலயங்களைக் குறிப்பிடுக.
(04 புள்ளகள்)

05. (அ) இலத்திரனியல் வணிகத்தின் நடைமுறைகளை படிமுறை ஒழுங்கில் தருக.
(ஆ) இலத்திரனியல் வர்த்தக விருத்திக்கு எதிராக உள்ள மட்டுப்பாடுகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி 11

### வினா இல 05

01. (அ) முகாமைத்துவம் என்பதற்கான வரைவிலக்கணத்திலுள்ள எண்ணக்கருவில் உள்ளடக்கப்படும் விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ள மதுராவிற்கு அதே சந்தர்ப்பத்தில் தனியார் வங்கியொன்றின் முகாமைத்துவ உதவியாளராக நியமனம் செய்வதற்கான நியமனக்கடிதமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் மதுரா இரண்டில் ஒன்றினைத் தெரிவு செய்வதற்கு சிறந்த தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய நிலையிலுள்ளார். இவர் எத்தகைய படிமுறைகளின் ஊடாக தீர்மானம் எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுக. (04 புள்ளகள்)

02. மோட்டார் வாகன உற்பத்தியில் ஈடுபடும் JET மோட்டர்ஸ் கம்பனி தனது வணிகத்திற்கான தூரநோக்கை (Vision) உருவாக்கியிருந்ததுடன், அதற்கமைய இலட்சியக் கூற்றினை (Mission Statement) தயாரிக்க விரும்புகின்றது. அந்த வகையில் இலட்சியக்கூற்றினைத் தயாரிக்கும்போது எவ்வாறான விடயங்களை கவனத்திலெடுக்க வேண்டும் என்பதை பட்டியல்படுத்துக. (04 புள்ளிகள்)

03. (அ) நிறுவனக் கட்டமைப்பொன்றின் ஊடாக வெளிப்படுத்தப்படும் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

(ஆ) கட்டுப்பாட்டுச் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. (அ) பூச்சாடிகளை உற்பத்தி செய்யும் உற்பத்தி நிறுவனமொன்றின் உற்பத்தி இயலளவு மாதாந்தம் 2000 அலகுகளாகும். அவ்வுற்பத்தி தொடர்பான ஏனைய தகவல்கள் வருமாறு.

- ❖ அலகொன்றின் விற்பனை விலை — ரூ 300
- ❖ அலகொன்றிற்கான மாறும் கிரயம் — ரூ 150
- ❖ நிலையான கிரயம் — ரூ 15000
- ❖ உத்தேச உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை — 1500 அலகுகளாகும்.

சமப்பாட்டுப் புள்ளியில் உற்பத்தி அலகுகளைக் கணிப்பிடுக.

(ஆ) உற்பத்திக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

05. (அ) இருப்புக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் நான்கு தருக.
(ஆ) இருப்புக் கட்டளையிடல் கிரயத்திற்கு நான்கு உதாரணம் தருக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளகள்)

### வினா இல 06

01. (அ) பொருள் ஒன்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்த உற்பத்தி நிறுவனம் ஒன்றினால் பின்பற்றக் கூடிய முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) வேலை உற்பத்தியின் பண்புகள் இரண்டு தருக. (04 புள்ளகள்)

02. இலக்கியன் பாதணி உற்பத்தியில் ஈடுபடுகின்றார். இவர் கூடுதலாக விற்பனைக் கருமங்களில் மட்டுமே கவனம் செலுத்தியிருந்தமையினால் அவரின் ஈடுபடுத்திய முதலுக்கேற்ப இலாபம் உழைக்கும் தன்மை குறைவாகக் காணப்பட்டது. இலக்கியன் க.பொ.த (உயர்தரம்) வணிகப்பிரிவில் கல்வி கற்ற தனது நண்பரான றொபேர்டிடம் ஆலோசனை கேட்டபோது விற்பனையோடு இணைந்ததாக சந்தைப்படுத்தல் கருமங்களில் கூடுதலான கவனத்தை செலுத்துமாறு கருத்து கூறப்பட்டது. றொபேர்டின் கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்குக. (04 புள்ளிகள்)

03. (அ) மென்பான உற்பத்தியில் ஈடுபட விரும்பும் அகமட் என்பவர் இலங்கையின் முழுமையான சந்தைக்கும் பொருளை தற்போது உற்பத்தி செய்து வழங்க முடியாத காரணத்தினால் மென்பான உற்பத்திச் சந்தையை பல்வேறு அடிப்படையில் துண்டமாக்குகின்றார். அவ்வாறு துண்டமாக்கப்பட்ட சந்தையில் விளைதிறனான சந்தையினைத் தெரிவு செய்ய வேண்டுமெனின் அச்சந்தைத் துண்டம் எவ்வாறான தேவைப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்பதைக் குறிப்பிடுக.

(ஆ) மேற்படி உற்பத்திக்கு சிறந்த கவர்ச்சிகரமான சின்னப்பெயர் ஒன்றினை தெரிவு செய்ய அகமட் விரும்புகின்றார் சிறந்த சின்னப் பெயர் ஒன்றில் இருக்கவேண்டிய பண்புகளைக் கருத்தில் கொண்டு நீர் ஒரு சின்னப்பெயர் ஒன்றினை சிபார்சு செய்க. (04 புள்ளிகள்)

04. (அ) விலையிடலுக்கான குறிக்கோள்கள் நான்கு தருக.

(ஆ) நுகர்வுப் பொருட்களை வகைப்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

05. (அ) மரத்திலான தளபாட உற்பத்திக் கம்பனியொன்றை புதிதாக ஆரம்பிக்க எண்ணியுள்ள குமரன் என்பவர் அவரது கம்பனி தொடர்பாக எடுக்கவேண்டிய நிதித்தீர்மான வகைகளைக் குறிப்பிடுக.

(ஆ) மூலதனப் பாதீடு என்பதனால் கருதப்படுவது யாது?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**வினா இல 07**

01. நிறுவனமொன்று நிதியினை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களில் முதலீடு செய்யும் போது கருத்தில் கொள்ளப்படும் விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

02. (அ) வெளியக ரீதியிலான நிதியீட்டல் வழிமுறையின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக.

(ஆ) கொழும்பு பங்குச் சந்தையில் பரிமாற்றப்படும் பிணைப்பத்திர முதலீடுகளிலிருந்து நேர் அனுகூலமாக மூலதன இலாபம் கிடைக்கப் பெறுகின்றது. மூலதன இலாபம் என்பதனால் கருதப்படுவது யாது என் உதாரணம் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

03. (அ) வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியரொருவர் தனக்கு வழங்கப்பட்ட தகுதிகாண் காலத்தினுள் தனது கருமங்களை உரிய முறையில் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பத்தில் வணிகத்தின் முகாமையினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கின் பெயர்களைத் தருக.

(ஆ) ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கும், அபிவிருத்திக்குமாகப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான முறைகள் நான்கின் பெயர்களை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. வரையறுத்த அருண் கம்பனியில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் புரள்வு மற்றும் வரவீனம் அதிகமாகக் காணப்பட்டது. இதனால் நிறுவன உற்பத்தியின் தரம், உற்பத்தித்திறன் என்பன குறைவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது. இதற்காக குறிப்பிட்ட நிறுவன முகாமை மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்புப்பட்டம் பெற்ற மலரவன் என்பவரை மனிதவள முகாமையாளராக நியமித்ததன் மூலம் ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்க்க முற்பட்டனர். அந்த வகையில் மலரவன் எவ்வாறான படிமுறைகளைப் பின்பற்றி வரையறுத்த அருண் கம்பனியின் ஊழியரின் துன்ப துயரங்களைத் தீர்த்திருப்பார் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

05. (அ) நிசாந்த் பிரபல கம்பனியொன்றில் புதிதாக நியமனம் பெற்ற கணக்கு எழுதுநராவார். நிசாந்த் தனது தொழில் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) ஊழியர்கள் தாம் பணியாற்றும் நிறுவனத்திற்கு எதிராக வேலைநிறுத்தம் செய்வதனால் ஊழியர்களுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

**வினா இல 08**

01. "தரவுகளைவிட தகவல்கள் மிகவும் பயனுடையதாகும்." தரவுகள் மற்றும் தகவல்களை ஒப்பிட்டு இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

02. (அ) கட்டமைக்கப்பட்ட மற்றும் பகுதி கட்டமைக்கப்பட்ட தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவும் தகவல் முறைமை எது எனக் குறிப்பிடுவதுடன், கட்டமைக்கப்பட்ட, பகுதி கட்டமைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு உதாரணம் தருக.

(ஆ) தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த ஏனைய தொழில்நுட்பங்கள் மூன்றின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

03. (அ) அன்றாடக் கருமங்களை மேற்கொள்வதற்கு தனிநபரொருவருக்கு இணைய வலையமைப்பின் மூலம் பெறக்கூடிய வசதிகளைக் குறிப்பிடுக.

(ஆ) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i.செய்திக் குழு (News Group)

ii.தொலைக் கணினி (Tele computing) (04 புள்ளிகள்)

04. (அ) வணிகத்திட்டமொன்றை தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(ஆ) சந்தைப்படுத்தல் திட்டத்தை தயாரிக்கும்போது போட்டி நிலைப் பகுப்பாய்வின்போது முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

05. (அ) செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிப்பதன் முக்கியத்துவம் இரண்டு தருக.

(ஆ) கருச் செயற்றிட்டக் கிரயத்துக்குள் உள்ளடங்கும் விடயங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)